# மாதர் மனோரஞ்சினி.

(எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்.—ஔவையார்.)

VOL. 2. புத்த. உ. | MADRAS: OCTOBER 1900. சென்னப்பட்டணம்: 1900ளு அக்டோபர்மீ. | No. 8. இல. அ.


## மாயாபுரி விநோதக்கதை.

104-வது பக்கத்தொடர்ச்சி.

என்வீட்டுக்கு வந்தவர் இவ்விடத்திலுண்ணாமல் அயல்வீட்டிலுண்டதுந்தவிர, இப்படித் தூஷிப்பது நியாயந்தானோ? உமக்கென்ன பெருமைக் குறைவுசெய்தோம். நாங்கள் தாமோ? உங்கள் பெருமையைக் குறைத்தோம். அரசனிடத்தில் நீங்கள் செய்த குறும்புக்காகத் தெய்வமேதெண்டித்து, ஈனஜாதிக்கடிமையாம்படி செய்துவிட்டதை யறியாமல், குளத்துக்குப்போய்க் குளித்துவாவென்ற சொல்லாலுங்கள் மானமெல்லாம் பறிபோய்விட்டதாகப் பதைபதைத்து ஊரெல்லாந் தூற்றியதென்ன புத்தி? உம்மைப்போல் நான் புத்திகெட்டவனல்லாமையா லதைப் பொறுத்துக் கொண்டேன். தகுந்த சிட்சைசெய்ய எனக்குச் சக்தியில்லாமற் போகவில்லை. விசாலாட்சிமுகத்துக்காகச் சும்மாவிருக்கிறேன். நீர்தான் செல்வமிழந்ததோடு புத்தியிழந்தாலும், இந்த முத்தம்மாளும், அவள் புருஷனும்கூட புத்திகெட்டசெய்கை செய்துவிட்டார்களே. அவர்களுக்கென் வலிமை தெரியாதோ? நல்லதாகட்டுமென்று கறுவினான். இதைக்கேட்ட ஐயர்முதலியோர் ஒன்றும் பேசாமலிருந்தார்கள். நாகம்மாளும் வந்துசேர்ந்தாள். விசாலாட்சியும், அவள் கணவனும், மூவருஞ்சேர்ந்து பேசினபேச்சுக்களவில்லை. இதைச்சகிக்கமாட்டாத மங்களாம்பாள் நடைத்திண்ணையிற் போயுட்கார்ந்து விசனப்பட்டுக்கொண்டிருந்தாள். வாசல்திண்ணையிலுட்கார்ந்திருந்த ஜகதீசன் மங்களாம்பாளைப் பார்த்து, அவளுக்கிது சம்மதமில்லையென்று முகக்குறியாற்கண்டு, மங்களாம்பா! இங்கேவா என்றவுடன் அவள் வந்து வாசற்படியில் நின்றாள். அவளைப்பார்த்து ஜகதீசன் மங்களாம்பா! உனக்கு உன்தாய்தந்தையர் செயல்சம்மதமில்லையென்று தெரியும். நிற்கட்டும், நானுன்னைமணம்புரிய ஆவலோடிருக்கிறேன். உன்கருத்தை வெளியிட்டாற் பின் தகுந்தயோசனைசெய்து கொள்ளலாம்; நேரமில்லை, சீக்கிரஞ்சொல்லென்றான். நானும்மை மணம்புரிவேனானால் அது என்பெரும்பாக்கியமாகு மென்றாள்.

உடனே மங்களாம்பாள் கையைப்பிடித்து மடியிலிருத்தி முத்தஞ்செய்து மங்களாம்பா! நீ முத்தம்மாளோடு நேசஞ்செய். நானுன்னையவசியம் மணம்புரிவேன்; நீ உறுதியாகவிருந்தால் என்னாலாகாததொன்றுமில்லை என்றான். மங்களாம்பாள் நானென்னசெய்கிறது? கட்டளையிட்டாலப்படியே நடந்துகொள்கிறேன் என்றாள். உனக்குப் பத்தாம்வயது பிறந்திருக்கிறது, இன்னும் இரண்டுவருஷம் விவாகஞ்செய்யாமலிருப்பாயானால் அதற்குள் எப்படியாவது நானுன்னை அக்கினிசாட்சியாக மணம்புரிவதில் தடையில்லையென்றான். மங்களாம்பாள் பிராணநாதா! அது என்னால்முடியும்; இரண்டுவருஷத்துக்குள் தாங்கள் வராவிட்டால் நானிறந்து விடுவேனென்பதை மனதிலுறுதியாக வைக்கவேண்டுகிறேனென்றழுதாள். ஜகதீசன் அவள் கண்ணைத்துடைத்து என் கண்ணே நீ அழாதே. இன்றோடு வேறெண்ணமெல்லாம் விட்டுவிட்டேன். உன்னைமணம்புரியும் மார்க்கமெதுவோ அதையே நினைத்து அம்முயற்சியிலேயே யிருப்பேன். காரியம் நிறைவேறிவிட்டால் நானுன்னிடம்வந்து, இருவருஞ்சேர்ந்து உயிர்துறந்து மறுஜன்மத்திலுன்னோடு கூடிவாழ்வதேயல்லாமல் வேறு நினைப்பதேயில்லை. நீ ஒன்றுக்கு மஞ்சாதே, எப்படியும் நாம் சித்தியடைவதில் தடையில்லை. இரண்டுவருஷத்தையுமிரண்டுநாளாக நினை; நாம் வழிபடும் குமாரசுவாமியை மறவாமல் தியானஞ்செய்துகொண்டிரு; யாராவது பார்க்கப்போகிறார்கள் நீபோய் வாவென்று முத்திதந்து அனுப்பினான். மங்களாம்பாள் பிராணநாதா! என்னையுயிரோடு பார்க்கவிரும்பினால் இரண்டுவருஷமாகுமுன் வரவேண்டும். அதற்குமேல் நானிவ்வுலகத்திலிரேன்; ஆகையால் நீர் வருத்தப்படவேண்டுவதில்லை; வேறு மணம்புரிந்து சுகமாகவாழ்ந்திரும்; இங்கேவரத்தேவையில்லை என்று தலைகவிழ்ந்ததுகண்டு, மங்களாம்பா! ஏனுனக்கந்தக் கவலை நான் முபலுங்காரியந்தவறாது, உன்னை மணம்புரியாமல் வேறு பெண்களை நான் கனவிலு நினைப்பதில்லை, கவலைப்படாதே, திடமாயிரு போய்வாவென்றான். மங்களாம்பாள் தன்மனதில் மகிழ்வும், துக்கமுங்கொண்டு, தெய்வமே இன்றுமுதலெனக்கு ஜகதீசனே கணவன். ஆகையால் கற்புடைமை கெடாதபடி காத்துரட்சிப்பதுன்பாரம். என் கணவன் தொடங்குங் காரியமெல்லாஞ் சித்தியாக கடாட்சிக்கவேண்டும். இன்றுமுதல் என்மனதில் ஜகதீசனைத்தவிர வேறு கனவு வாராதிருக்கக்கடவதென்று பிரார்த்தித்துக்கொண்டு அப்புறம்போயிருந்தாள். பின்பு விசாலாட்சியும், அவள் கணவனும் சொன்னசொற்களெல்லாம் இருதயத்தைப் பிளக்க யாதொரு பேச்சும் பேசாமல் ஐயர் முத்தம்மாள் முதலியோர் எழுந்திருந்து நாங்களூருக்குப் போய்வருகிறோம், நாங்கள் செய்த அபசாரத்தை மனதில் வையாதிருக்கப் பிரார்த்திக்கிறோம், என்று வணக்கமாகக்கூறி முக

ம்வாடிவெளியில் வந்துவிட்டார்கள். ஜகதீசனுங்கூடச்சேர்ந்து முத்தம்மாள் வீட்டுக்குப்போய்ச் சேர்ந்தவுடனே தங்களுக்கு நேர்ந்த அவமானத்தைக் குறித்து முத்தம்மாள் கணவனும், ஐயரவர்களும் பேசிக்கொண்டிருந்து பின்பு, முத்தம்மாள் கணவன் சுவாமீ ! அந்தத்துஷ்டன் மகாகொடிய காரியங்களையுந் துணிந்துசெய்வான். பிராமணகுலத்திற் பிறந்ததேதவிர அதற்குரிய ஒழுக்கங்கள் சிறிதுமில்லை. என்னென்ன செய்வானேவென, ஐயாவர்கள் நாமவ்வளவு எளியவர்களல்ல ; அவனலொன்றுமாகாது ! நம்வழிபடு கடவுள் நம்மைக்காப்பார். நீரொன்றுக்கும் அஞ்சவேண்டாம். நான் வேண்டுகிறதொன்று, அதாவது நீரும் முத்தம்மாளும் எனக்கு உயிர்த்தோழர்களாகவிருந்து நடக்கும் காரியங்களை அப்போதைக்கப்போதெனக் கறிவிக்கவேண்டும், அதுவேயென்று கூறினர். சுவாமி யிதென்ன புதுமை ! நானப்படிப்பட்டவனே ? நான் தங்களுக்கடிமையென்பதிலையமேயில்லை. தாங்களுறுதியாக நம்புங்கள். முத்தம்மாளுமப்படியே, தடையிராதென்றார். முத்தம்மாளுங்கூடச் சேர்ந்து ஐயரவர்களுக்கும், விஜயலட்சுமிக்கும் வேண்டியவுறுதிமொழிகளைக்கூறி யாவருங்கவலையற்றுப் போஜனமுதலிய செய்து, காலையிற் பிரயாணம் நிச்சயம்பண்ணி, நித்திரைசெய்யச் சென்றார்கள். முத்தம்மாளும், விஜயலட்சுமி, ஜகதீசன் மூவரும் நெடுநேரம் பேசிக்கொண்டு நித்திரை யில்லாமலிருந்தார்கள். முத்தம்மாள், விஜயலட்சுமியம்மா! இவர்கள் கொழுப்பைப் பார்த்தீர்களா ? பெண்கேட்கவந்தாலிஷ்டமிருந்தாலொத்துக்கொள்ள, இல்லாவிட்டாலில்லை யென்றுகூற, அதைவிட்டு வீண்சண்டையிட்டார்களே,நாகம்மாள் கண்குளிரப்பார்த்து நகைத்துக்கொண்டிருந்தாளே அவள் கொழுப்பைப் பார்த்தீர்களா ? அவள் நமது வேலைக்காரியல்லவா ? கொஞ்சமாவது மரியாதையாயிருந்தாளா ? அவர்களுக்குத்தெய்வந்தான் கூலிகொடுக்கவேண்டு மென்றாள். விஜயலட்சுமி அவர்கள்பேரில் தோஷமில்லை. நான் என் தெய்வமாகிய நாயகர் பேச்சைக்கேளாமல் வந்தபலனிதுவென்று சொல்லித்தலைகுனிந்து கண்ணீர்விடக்கண்ட ஜகதீசன் எழுந்திருந்து தாயைப்பணிந்து அம்மா நீரேன்கவலைப்படவேண்டும், நாம் வழிபடு கடவுளிவர்களுக்களியாதோ ? இன்னமிரண்டு வருஷத்துக்குள்ளாக மங்களாம்பாளை மணம்புரிந்து, விசாலாட்சியையும், அவள் கணவனையும் நமதடிமைவேலை செய்யச் செய்கிறேன் ; நாகம்மாளுக்குத்தகுந்தபுத்திசொல்லுகிறேன் ; நீங்கள் கவலைப்படவேண்டாம். வாயாற்சொல்லிப்பயனில்லை. நானிப்படிச்செய்யாவிட்டால் நான் தங்களுக்குப்பிறந்தவனல்லவென்று நிச்சயமாய் நினையுங்கள் என்றுகூறி,முத்தம்மாள் பாதத்தில் பணிந்து சின்னம்மா ! நீங்கள்செய்யுமுதவியொன்றுண்டு ,அதை

நிறைவேற்றித் தரவேண்டுமென அவள் அவனை மடியில்வைத்து முத்த மிட்டு, அப்பாகுழந்தாய் எனக்குப் புத்திரனிதுவரையிலில்லை, இனிப் பிறக்குமென்கிற நம்பிக்கையுமில்லை நீயே யென்புத்திரன், நான்செய்யவேண் டியதைத் தடையின்றிச் செய்கிறேன், சொல்லென, சின்னம்மா! மங்களாம் பாள் என்னைத்தவிர வேறொரு புருஷனை மணப்பதில்லை யென்றும், இர ண்டு வருஷம்வரைக்கும் மணம்புரிவிக்க வொட்டாமல்தடைசெய்து வருகி றேனென்றும், அதற்குள் நான் வராவிட்டாலிறந்து விடுவேனென்று முறு திமொழிகூறியிருக்கிறாள். அவளடிக்கடி தங்களைப் பார்ப்பாள், அவள் மன தை யுறுதிப்படுத்திச் சமயோஜிதமான புத்தியுக்திகளைச்சொல்லி யிரண்டு வருஷம் பாதுகாக்கவேண்டுகிறேன். அதற்குள் எவ்வகையிலாவது காரிய சித்தியாக்கிக்கொள்கிறேன், எனக்கிந்த வரந்தரவேண்டுமென்றான்; முத்தம் மாளுக்குப் பேரானந்தமுண்டாய் அப்பனே அப்படியே செய்கிறேன், நீ கவலைப்படாதே யென்று உறுதிசெய்துகொடுத்தாள். மூவரும் சிறிது நித்தி ரை செய்யக்கோழிகூவியதுகண்டு, எல்லோருமெழுந்து பிரயாணத்துக்குத் தயாராய் ஐயர்முதலியோர் வண்டியிலேறினார்கள். தேவரஞ்சரியம்மாள்.

## உயர்ந்த கல்வியினால் வரும் பெருமையும் அற்பகல்வியினால் வரும் சிறுமையும்.

(128-ம் பக்கத்தொடர்ச்சி.)

---

நிற்க சிறுமிகளை ஆதிமுதல் நல்லவிதமான வழியில் அப்பியசிக்கச் செய்ய வேண்டும். எந்தக் குடும்பத்தில் ஸ்திரீயானவள் தக்க கல்வியை யடைந் திருக்கிறாளோ அந்தக் குடும்பத்தில் தோன்றிய சிறுவர் சிறுமிகளும் தகுந்த விவேகிகளாகத் தடையில்லை. மேலேகூறியபடி இமயவல்லிமாதிரி நூற்றுக்கு ஒரு ஸ்திரீ தகுந்த கல்வியுடையவளாயிருப்பது துல்லபமா யிருக்கிறது; அப்படிக்கிருக்கும் ஒருவர் பத்துபெயரில் அகப்பட்ட பாம்பு போல் அவர் படிப்பை நிலைநிறுத்திக்கொள்வது பூர்வபுண்ணியமென்றே சொல்லல்வேண்டும், பெண்கல்வி விர்த்தியாகிறதென்று தற்காலம் பிரஸ் தாபமேதவிர தக்கவிதமாய் முன்னுக்கு வருவதைக்காணோம். சம்பாஷணை யில் கூறியபடி தக்கவிதமான கல்வியில்லாமையினால் துர்க்குணமடையும் சிலரைப்பார்த்து பெண்கள் படித்தால் கெட்டுப்போவார்களென்று அனே கர் அபிப்பிராயப்படுகிறார்கள். வெயிலானது மாலையில் மஞ்சளாய் தோற் றுவது கண்ணின்குற்றமேதவிர வெயிலின் குற்றமாகுமோ, ஊட்டத் தெரியாத குற்றத்தால் ஒருகுழந்தை புரையேறி இறந்துவிட்டால் பாலின்

மேல் தோஷம் சுமத்தக்கூடுமோ? அதுபோலகல்வியின்மேல், தோஷம் என்ன இருக்கின்றது? சிறுமிகள் எழுதப்படிக்கத்தேர்ந்தும் பக்திமார்க்கங்களைக்கூறும் திருத்தொண்டர்சரித்திரங்களையும் கற்பரசிகளின் விர்த்தாந்தங்களையும் ஈகை யிரக்கம் முதலிய பரோபகாரத்தைத் தெரிவிக்கும் நூல்களையும், மாதர்களின் நன்மைக்காகவே வெளியிடப்படும் சில பத்திரிகைகளையும் ஓதச்செய்யவேண்டும். அவ்விதம் நன்மார்க்கமான கல்வியிற் றேர்ந்தவர்கள் எக்காலத்திலும் கெடார்களென்றும், இகத்திலும் பரத்திலும் நன்மையடைவார்களென்றும் கட்டாயமாய்ச் சொல்லக்கூடும். தவிரவும் ஜெகநாதராகிய கடவுளுக்கு பக்ஷபாதமிருக்குமோ? ஒவ்வொருவருக்கும் சமமான புத்தியைத் தான் சிருஷ்டித்திருப்பார். நல்லவழியில் திருத்தினால் நல்லவழியில் திரும்பும்; கெட்டவிதம் அப்பியசித்தால் கெட்டவிதமாகத்தான் மாறும். ஒருவன் மிக்கசாமர்த்தியமாக போர்ச்செரி செய்யக் கற்றுக்கொள்ளுகிறான். செய்வதையும் காண்கிறோம். அது புத்திசாதுர்யமல்லவா? ஆதலால் விவேகமும், கல்வியும் எல்லாருக்கும் உள்ளதுதான். திருப்பியவிதம் செல்லும். படித்தால் ஒருவருக்கு விவேகமும், மற்றொருவருக்கு அவிவேகமும்விளங்குமா? ஆணென்றாலும் பெண்ணென்றாலும் சிருஷ்டிப்பில்வித்தியாசம் கூறக்கூடுமோ? இவ்வளவிற்கும் ஆடவர் முயற்சியும் சம்மதமும் இன்றெனில் பெண்கல்விவிர்த்திக்குவரச்சிறிதும் மார்க்கமில்லை. தற்காலம் நமது தேயத்தில் கல்வியென்னும் செல்வியைப் பெண்பாலார்களும் அடையவேண்டுமென்று விவேகமுள்ள ஆடவோத்தமர்கள் சிலர் பொது நன்மையை நாடி நமக்காக எவ்வளவோ உழைத்துவருகிறார்கள். சிலர் அவர்களாக பிரயத்தினித்து கஷ்டப்பட்டு படித்தாலும் அல்லது விட்டுவிட்டாலும் எதையும் காதில் போட்டுக்கொள்ளாமல் விட்டுவிடுகிறார்கள். இன்னும்சிலரோ யாராவது படிக்கும் புஸ்தகம் வீட்டிலிருக்கக் கண்டால் தன் மனைவியினுடையதே யென்று நினைத்து தன் அவிவேகத்திற்கு பிறப்பிடமாய் தனக்குச் சகாயமாய் குரூரபுத்தி நிறைந்த தாய் தந்தை சகோதரி இவர்களைநோக்கி அம்மா நாளையதினமுதல் நான் கச்சேரிக்குப் போகவேண்டுவதில்லை; இனி என் விவகாரங்களையெல்லாம் உன்மாட்டுப்பெண் பார்த்துக்கொள்ளுவாள் என தன் ஆண்தன்மையே குறைந்ததுபோல உரைத்தமாத்திரத்தில் ''சந்துவிட்டதும் வந்துவிட்டான்'' என்கிற பழமொழிப்படி அப்பா அவள் சேலையை நீவாங்கித் தரித்துக்கொள், உன் வேஷ்டியை அவள் வாங்கிக் கட்டிக்கொள்ளட்டுமென்று இன்னுமெவ்வளவோ பொறுக்கக்கூடாத குரூரவார்த்தைகளை மொழிந்து அவர் புத்தியை விர்த்திசெய்வார்கள். கல்வி, உத்தியோகம் செய்பவர்களுக்காகவே தவிர மற்றவர்களுக்கு வேண்டுவதில்லையென்பது அவர்கள் கருத்து. சாதாரண

மாய் வீட்டுவேலை செய்பவர்களானாலும் அதிக அறியாமையுள்ளவர்களாயின் அவர்களிடம் வேலைவாங்குவது மிக்க வருத்தமாகவேயிருக்கின்றதல்லவா? ஆனால் அப்படிப்போல தங்கள் வீட்டுப்பெண்கள் மூடர்களாயிருக்கவும் சம்மதப் படுவார்களென்று சொல்வதற்கிடமில்லை. பின் என்னெனில் கற்காமலே அறிவுவிளங்கவேண்டுமென்பது கருத்து. இவ்வளவு நிர்ப்பந்தத்தில் படிக்கவிரும்பும் ஸ்திரீயின் மனம் எவ்வளவு துன்பத்தையடையும்? பிறந்தவீட்டில் நன்றாய் கற்றுவந்து மாமியார்வீடு வந்ததும் மறந்துவிடவேண்டுமென்று நிர்ப்பந்தப்படுத்தும் குடும்பங்களும் அனேகம். இது விஷயத்தைப்பற்றி விஸ்தரிக்கின் வளரும். நான் பேசப்புகுந்த விஷயம் இதுவல்ல. நிற்க, மேலே குறித்த மூன்றுவித குணத்தையுடைய ஆடவர்களில் முன்மொழிந்த ஆடவோத்தமர்களிடத்தில் தவிர மற்ற இருவிதமாகிய குணத்தையுடைய ஆடவர்களிடம் பெண்கள் கல்வியை விர்த்திசெய்துக்கொள்வது மிகுந்த கஷ்டமென்றாலும் கடைசியாகக்கூறிய மார்க்கத்தையுடையவர்களிடம் படிக்கவிரும்பும் பெண்களின் துன்பம் நாம் கூறாமலே விளங்கும். முன்னேபோனால் ஸ்திரீ ஹத்தி, பின்னேபோனால் சிசுஹத்தி, நடுவில்போனால் பிரம்மகத்தி என்றல்லவோ முடிகிறது. கடைசியாக நாம் கூறுவது என்னவெனின் பெண்களுக்கு கல்வி கற்பிப்பதுடன் நல்லவிதமான கல்வியை கற்பிக்குமாறு தாய் தந்தையர்கள் ஒரு மனதாய் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதாய் விரும்பும்,

ருக்குமணியம்மாள்.

## புற்புலத்து நெட்டிலிங்கமையர் வைபவம்

---

நெட்டிலிங்கம் என்பவன் யார்?

இவனும் புற்புலத்து வறிய அந்தணர்களில் ஒருவன். வக்கமையர் வம்சத்தைச் சேர்ந்தவனாயிருந்ததுடன் அவருடைய முதல் சந்ததியிலிருந்து உதித்து நான்காம் தலைமுறையைச்சேர்ந்தவன், இவனைப்பார்த்த சில கிழவர்கள் நெட்டிலிங்கம் ஐந்தெழுத்தும் பாவனையும் வக்கமையர்போலிருக்கிறான் என்பார்கள். ஒவ்வொரு விதத்திலும் வக்கமையர்போன்ற அதே உருவம், அதே அங்க அடையாளம், அதே மூக்கு, அதேகண், அதே தலை, அதே நடை வக்கமையரே சிறு உருவங்கொண்டு வந்தாரோ என்று ஜனங்கள் சொல்லும்படியாய் நெட்டிலிங்கம் இருந்தான். ஆனால் அந்தக்காலம் போய்விட்டது. இப்பொழுது வக்கமையர் வம்சம் வறிய வம்சமாய்விடவே என்னதான் நெட்டிலிங்கம் வக்கமையரை அங்க அடையாளங்களி லனுசரித்தபோதிலும் அவர் வித்தைமுதலியவைகளையடைய எங்குபோவான்.

ஆனல் எல்லாருக்கும் அவரவருக்கேற்றபடி வித்தையையும் அமைக்க ஈசனெருவனிருக்கிருனல்லவா ?

நெட்டிலிங்கத்திற்கு 2, 3 சகோதரிகள் உண்டு. அவர்களில் ஒருவள் ஒரு பெரியமனிதனுக்கு வாழ்க்கைப்பட்டிருந்தாள். அவள் புருஷன் சீர்காழியில் சர்க்கார் உத்தியோகத்தில் முகஸா ஜவாபுனவீஸ் உத்தியோகம் செய்துவந்தார். அவர் ஒருவேளையில் புற்புலத்திற்கு வந்தகாலத்தில் தனது மைத்துனனுன நெட்டிலிங்கத்தை 4, 5 வயதுள்ளவனுக இருக்கும்போதே பார்த்து அவனது தேககாந்தியைக் கண்டு அகமகிழ்ந்தார். அதற்கு ஒரு காரணமுமிருந்தது. இந்த முகஸா ஜவாபுனவீஸின் பெயர் சாமுவையர். சாமுவையருக்கு புத்திரனென்னும் பாக்கியம் கிடையாது அவர் மனையாள் தனது தம்பி தலைக்குப் போதுமான எண்ணெயில்லாமலும் வயிற்றுக்குச்சரியான ஊணில்லாமலும் வருந்துவதைக்கண்டு, "ஐயோ ! இப்பாலகனைநாம் எடுத்துப்போனல் நமது பிள்ளையில்லாக்குறையை இவன் முகத்தைப்பார்த்து ஒருவாறு ஆற்றிக்கொள்ளலாம் ; இவனும் பிழைத்து முன்னுக்கு வருவான்" என்று தனச்குள்ளேயே ஆலோசித்து, அதை தன் கணவனிடம் தெரிவித்தாள். அவரும் அதற்கு இணங்கினர். நெட்டிலிங்கத்துக்கு 5-வது வயது முடியும் முன்னே சாமுவையரும் அவருடைய நாயகியும் அவனை புற்புலத்திலிருந்து சீர்காழிக்கு எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள்.

சாமுவையர் சர்க்கார்வேலையிலிருந்ததாக நாம் சொன்னேமே. அக்காலத்து 5 ரூபா வேலை இக்காலத்து 500 ரூபா வேலைக்குச் சமானம். கலம் கால்ரூபா அப்போது. இப்போதோ கலம் 1½ அல்லது 2 ரூபாய்க்குக் குறையாமல் விற்கிறது. அக்காலத்தில் எல்லாவித பதார்த்தங்களும் அபரிமிதம். வாங்குகிறவர்களற்று காயும் கறியும் பழமும் மிதிபட்டு நாசமடையும். ஒரு காசுக்கு ஒரு கூடைகத்தரிக்காய் ; ஒரு மூன்றுகாசு துட்டுக்கு ஒருபக்காப்படி உப்பு வாங்கலாம். அன்றியும் ஸர்க்கார்வேலையின் ரஹஸ்யமே ஒருவருக்கும் தெரியாது. குடிகள் உத்தியோகஸ்தனை வெள்ளைவேஷ்டி போட்டு வரக்கண்டால் நடுங்குவார்கள். சாமுவையர் ஏதாவது ஒரு கிராமத்தை அளக்கப்புறப்பட்டால் தன் வீட்டுக்கு ஒருவருஷத்திற்கு வேண்டிய நெல்லு, கொள்ளு, பருத்திக்கொட்டை, தீபாவளிக்கு தனக்கும் தன்னை யடுத்தவர்களுக்கும் வேண்டியசோமன் சோடு புடவை, இவைகளன்றி கையில் 400, 500 ரூபாய்க்குக்குறையாமல் பணம்,இவைகளுக்குக் குறையாமல் வீடுவரமாட்டார். அவர் வீட்டில் 10 மாடுகள்கறக்கும். ஒன்ருவது சொந்தமல்ல. மாடுகள் கன்றுபோட்டதும் எவனாவது ஒரு மிராசுதார் சாமுவையரவாள் கொட்டிலில் அதைக்கொண்டுவந்து கட்டிவிட்டுப் போவான். அன்றி

யும் "ஐயரவாள், நான் 5 நாளைக்குமுன் வந்திருந்தபோது நல்லபால் கிடைக்கிறதில்லை என்று சமுகம் சொல்லக்கேட்டேன், சைய்! நமது சன்மம் பாழ்த்தது; நமது வீட்டில் 4 மாடுகள் கறக்கும்பொழுது சமுகத்திற்கு ஒன்றுவது வேண்டாமா என்று நினைத்தேன் உடனே பள்ளப்பயல் என் மாடு ஒன்று கன்றுபோட்டு 3 நாளாயிற்று என்றான், கொண்டா ஏன்றுசொல்லி இவ்விடம் அம்மாட்டை நான் ஓட்டிக்கொண்டுவந்தேன். என்னவோ ஏழைகள்பேரில் கொஞ்சம் தயவுமட்டும் இருக்கவேண்டும். போனவாரம் சுப்புசாமிக் கணக்குபிள்ளை வஜாப்பட்டி எழுதி தாலூக்காவுக்கு அனுப்பினான். இந்த வருஷம் வெள்ளம் நின்று 10 வேலி நிலம் என்னுடையது எக்கலடித்திருக்க அதை தரிசு என்று காட்டாமல் சாகுபடியிலிருப்பதாக பதிந்துவிட்டான். அந்த வயல்களில் ஒன்றுமில்லை. இப்படி சாகுபடியில்லாத நிலத்தைச் சாகுபடியானதாகக்காட்டி தீர்வை வாங்கினால் ஏழைகள் என்ன பண்ணுகிறது" என்பான் அதற்கு "சாமுவையர் ஒய்! கன்றுக்குட்டி வெகு லட்சணமாயிருக்கின்றது. அடியே மாட்டை முலையைத்திருகி கன்றுக்குட்டியை சாகப்பண்ணிவிடாதே. ஒரு சறகு கறந்து ஒரு சறகு கன்றுக்குட்டிக்கு விட்டுவிடவேண்டும் தெரியுமா. இளங்கன்று; அதுகடக்கட்டும். அந்தப்பயல் கிடக்கிறான். நீர் பயப்படவேண்டாம்; நான் பார்த்துக்கொள்ளுகிறேன். அந்தக் கணக்கு எனக்கு வந்து தான் மேலதிகாரிகளுக்குப் போகவேணும்; மனதில் கவலைவைக்காதேயும்" என்பார். உடனே சமயம்விடக்கூடாதென்று அந்த மிராசுதார் "அப்படி சொல்லுங்கள் மகாராஜா, அந்த கன்றுக்குட்டிக்கு ஒரு சறகுவிட்டுவிடவேணும் என்று அம்மாளுக்கு உத்தரவு பண்ணினீர்கள் அதிலேயே அவ்வளவு கருணையிருக்கும்போது ஏழைகளாகிய எங்களையும் உங்கள் வீட்டுக்கன்றுக்குட்டியைப் போல் நடத்தவேணும் என்பார். இதற்குள் கொஞ்சதூரத்தில் நின்றுகொண்டு தனது புருஷனுக்கு இருக்கும் செல்வாக்கைக்கண்டு களித்து மனம்பூரித்து மெய்மறந்திருக்கும் சாமுவையர் சம்சாரம் "அவர் ஊரிலே யாரோ ஒரு செட்டி நகைகொண்டுவருகிறானாம். புதுச்சேரி வேலையாம். நம்ம குழந்தை நெட்டிலிங்கத்துக்கு ஒரு காப்பு கொலுசு வாங்கிப்போட்டால் அந்த செகப்பு உடம்புக்கும் கட்டைகாலுக்கும் கையுக்கும் எத்தனை அழகாயிருக்கும்! என்ன சம்பளம்வந்தாலும் அந்தக்குழந்தைக்கு நகைபண்ணவேண்டுமென்றால் உங்களுக்கு மிகுந்திருக்காது. இவர்களுடன் சொல்லிவைத்தால் அந்த செட்டிவரும்போது வாங்கி அனுப்புவார். சம்பளம் வந்தவுடன்கொடுத்துவிடலாம்" என்பாள். இதைக்கேட்டதும். சாமுவையர் அந்த மிராசுதாரரைப்பார்த்து தன் மனதிற்குள் நல்லசமயத்தில் கியாபகப்படுத்தினாள் என்று மனைவியை மெச்சிக்கொண்டு வெளியில் "ஒய் இவ்வளவு உமக்கு

தெரிந்திருக்கிறதே! இந்த பெண்டுகள் சகவாஸத்தைவிட்டு ஒழிய ஒரு வழி சொல்லமாட்டீரா! அடே அப்பா! எப்போ பார்த்தாலும் நகை நகை, தாலி, பீலி, காப்பு, சங்கிலி, ஸதா இதுதானு பேச்சு. ஒரு மனிதனை 1000-ம் காகங்கள் சேர்ந்து கொத்துவதுபோல் கொத்திவிடுகிறுள். இப்போது இல்லை என்றேனே? ஆமா நெட்டிலிங்கம் நம்ம குழந்தையாயிருந்தால் அதற்கு 5-வயதாயும் காலும் கையும் கட்டை கட்டையாய் அனுதியாய் நிற்குமா என்பாள்? அப்பா! பெண்டுகள் பெரிய நீலிகள், தொலையும், என்ன பண்ணுகிறது? அந்த செட்டி வரும்போது அகத்தியும் அம்மா சொல்லுவதை வாங்கியனுப்பும். இல்லையோ என் பிராணன் போய்விடும்" என்பார். என் செய்வார் மிராசுதார் ஒப்புக்கொள்ளாவிடில் வழியில்லை. அப்படியே ஆகட்டும் என்று ஒப்புக்கொண்டுபோய் உடனே வாங்கியனுப்புவான்.

---

## ஸிம்பலேன்.

### 4-ம் அத்தியாயம்.

---

அன்றையதினம் இராத்திரி இயாக்கிமோ சொன்னபடி இமொஜனிடத்தில் ஒரு பீப்பாய் அனுப்பப்பட்டது. அதை இமொஜன் அதிகபத்திரமாய்க் காப்பாற்றவேணுமென்று தன் படுக்கையறையின் ஒரு மூலையில் வைத்துச் சிறிதுநேரம் ஒரு புஸ்தகத்தை வாசித்துக்கொண்டிருந்து தன் தோழியைக்கூப்பிட்டு நேரம் என்னவென்று கேட்க, அவள் அர்த்தராத்திரியாய்விட்டதென்றுள். அப்பொழுது இமொஜன் சரிதான், நான் மூன்று மணி நேரம் வாசித்தாய்விட்டது, தூக்கம் என் கண்ணைச் சுற்றுகிறது. நான் வாசித்து நிறுத்திய இடத்தில் ஓரடையாளம் வைத்துப் புஸ்தகத்தை மூடிப் படுக்கையைவிரி; விளக்கையணைத்துவிடாதே. நாலுமணிக்கு நீயெழுந்திருந்தால் என்னைத் தயவுசெய்து எழுப்பு; தூக்கம் என் கண்ணைச் சுற்றுகிறது, நான் படுத்துக்கொள்ளுகிறேன், என்றுரைத்து, தெய்வமே இன்றிரவு பிசாசுக்கூட்டத்திலிருந்தும், விபசாரித்துவம் செய்கிற துஷ்டமனிதர்களுடைய கொடுமையினின்றும் என்னைக்காப்பாற்றியென்னுடைய பதிவிரதாதருமம் களங்கமின்றி யோங்கிவரும்படியாய்ச் செய்யவேணும், என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டு நித்திரைசெய்தாள். நன்றாய் நித்திரைசெய்கையில், மூலையில் பத்திரமாய் வைக்கப்பட்ட பீப்பாயிலிருந்து ஒரு மனிதன் வெளியிலே புறப்பட்டான். அர்த்தராத்திரியில் பீப்பாயிலிருந்து வெளியில் வந்ததினால், அவனைத் தெய்வமோ அல்லது பிசாசோவென்று நினைக்கவேண்

டாம். அதிலிருந்துவந்தவன், இமொஜனின் கற்பையழிக்கவந்து சாத்தியப் படாமற்போக அப்பொழுது என் தைரியத்தை விடக்கூடாது, வேறே யொரு உபாயத்தைத்தேடி அவளது கற்பையழிக்கவேணுமென்று நினைத்த சண்டாளனாகிய இயாக்கிமோவே. இப்பரமதுரோகி பீப்பாயிலிருந்து வெளியிலேவந்து, இமொஜனையும் தேவலோகத்துக்குச் சமானமான அந்த அறையையும் பார்த்து மிக்க வியப்படைந்து, என்னைப்போல் அநேகம் பேர்கள் பெண்களின் கற்பையழிக்க நடுராத்திரியில் பிரயத்தனம் செய்திருக்கிறார்கள்; அதைப்போல என் காரியமும் இப்பொழுது நிறைவேற வேணுமென்று கடவுளைப் பிரார்த்தித்துக்கொண்டு சொல்லுகிறான். ரதிக்கொப்பான இம்மாதைத்தரிசிக்காதவன் என்னபாவம் செய்திருக்கவேணும் இவளுடைய உதடுகளைப்பார்த்தால் என்னை மயக்குகின்றது. ஒரு முத்தம் கொடுத்தால் எவ்வளவு பாக்கியசாலியாயிருப்பேன்! இந்த அறையிலுண்டான வாசனையைப் பார்த்தால் பூலோகத்திலுள்ளதல்லவென்று நிச்சயிக்கலாம். அவளுடைய சுவாசந்தான் இவ்வளவுவாசனையைக் கொடுக்கிறது. இவைகளைப் பார்த்துப் பெருமூச்சுவிடுவதினால் பிரயோசனமில்லை; என்று சொல்லி, அந்த அறையிலுண்டான அடையாளங்களெல்லாவற்றையும் பார்த்து ஒரு சடிதத்தில் எழுதிக்கொண்டு இந்த அடையாளங்களைச் சொல்லிப் பாஸ்துமஸை ஏமாற்றலாமென்று தைரியத்துடனிருந்தான். அப்பொழுது ஆலோசித்ததில், இது சரியல்ல, இவளுடைய உடம்பிலிருந்து ஒரு அடையாளம் கொண்டுபோக வேணுமென்று நினைத்து, இமொஜன் கிட்டப் போய், அவள் கையில் போட்டிருந்த பாஸ்துமஸ் கொடுத்த காப்பை மெதுவாக எடுத்துத் தன் கையில் வைத்துக்கொண்டு, இந்த ஒரு அடையாளம் போதும். வேறேவித ஆயிரம் அடையாளங்களைப் பார்க்கிலும் இந்தக் காப்பு அதிக விசேஷமானது; இதைப் பாஸ்துமஸ் பார்த்தால் பித்தம் பிடித்தவனைப்போலாய், நான் சொல்வதை நிஜமென்று நம்பி என்னைப் புகழ்ந்துகொள்வான். ஆ! ஆ!! என்ன ஆச்சரியம். என்னைப்போல அதிர்ஷ்டசாலி எவனிருக்கிறான்? 'திக்கற்றவனுக்குத் தெய்வமேதுணை' யென்றதுபோல, எல்லாவற்றிலும் சிறந்த ஓரடையாளம் இதோ காண்கிறேன். இவளுடைய இடதுமார்பில் ஒருமறு இருக்கிறது. இந்த அடையாளத்தை அவனிடத்தில் சொன்னால், நான் இமொஜனின் கற்பையழித்தேனென்று நிச்சயமாய்ச்சொல்வான், என் காரியமும் நிறைவேறும்; இதைவிட வேறு என்ன அடையாளமிருக்கிறது. 'கதியற்றவனைத் தெய்வங்காப்பாற்றுமென்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டு, பீப்பாய்க்குள் நுழைந்து சூஸ்திரத்தை மூடி தெய்வமே இவ்விரவு சீக்கிரம் போகட்டும், எப்போது எனக்கு அபாயம் நேரிடுமோ தெரியவில்லையே. ரம்பைக்கொப்பான

இமொஜனிங்கே யிருந்தும், நரகத்தில் கிடந்து வருந்துகின்ற பாவிகளைப் போல துடிக்கிறேன்; மணியொன்று அடித்தாய்விட்டது, இரண்டு, மூன்று, நாலு அடிக்கிறது, நேரமாய்விட்டதென்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டு பீப்பாய்க்குள் இருந்தான்.

அடுத்த நாள் காலையில் க்ளோட்டன் என்பவன் இமொஜன் நித்திரை செய்த அறைக்கு அடுத்த அறையில் வந்து, இரண்டு பாகவதர்களைக் கொண்டு "இமொஜன் காதுகேட்கும்படியாய் முதலில் வீணை, பிட்டிலினால் பாடுங்கள், பிறகு வாயால் பாடுங்கள். அதற்கும் இமொஜன் எழுந்திராமற்போனால், அவளுடைய குற்றந்தான். நானும் நல்ல வார்த்தைகள் சொல்லிக் கூப்பிடுகிறேன் என்று சொல்ல, பாகவதர்கள் ஒரு நல்ல கீதத்தைப்பாடி முடித்தார்கள். அப்போது அரசனும், அவன் மனைவியும அங்கேவந்து, "இன்னும் இங்கே தான் காத்துக்கொண்டிருக்கிறாயா, இமொஜன் வெளியில் வரவில்லையா, அவளுடைய பர்த்தா ஊரைவிட்டுப்போனதை இன்னும் மறக்கவில்லையென்று தோன்றுகிறது. மறந்துபோனால் அவள் தானாகவே உன்னை யடைவாள்," என்று சொல்ல, அப்போது அவன் மனைவி க்ளோட்டனைப் பார்த்து, "இமொஜன் உன்னை யடைய வேணுமென்று, அரசன் வேண்டிய சிரமமெடுக்கிறதற்கு நீ வந்தனம் செய்யவேணும். இமொஜனிடத்தில் தகுந்த சமயம்பார்த்து மரியாதையாயும் தாழ்ந்துகொண்டும் வார்த்தைசொல்; அவளுடையபாதாரவிந்தங்களே கதியென்று பணிவிடைகள் செய். அவள்பேரில் நீ அதிகப்பிரியத்துடன் சொன்னதுபோலக் காட்டவேண்டும். அவள் என்னசொன்னாலும் நாய்போல் காத்துக்கொண்டிருந்துசெய். தர்க்கஞ் செய்யாதே; ஆனால் ஒரு விஷயத்தில்மாத்திரம் மாட்டேனென்றுசொல். அவளைவிட்டுப்போவென்று சொன்னால் நீபோகாதே. நல்லவார்த்தைகளைச்சொல்லி அங்கே நிற்கவேணும்" என்று சொல்லியிருவரும் போய்விட்டார்கள்.

அப்பொழுது க்ளோட்டன் "இமொஜன் எழுந்திருந்தால் அவளுடன் வார்த்தைசொல்லுகிறேன்; இல்லாமற்போனால் நித்திரைசெய்யட்டும்" என்றுசொல்லிக் கதவைத்தட்டி "உள்ளேயார், அவளுடன் தோழிகளிருப்பார்கள், அவர்களில் ஒருவளுக்கு லஞ்சம் கொடுத்தால்தானென்ன, பணமிருந்தால் எந்தக் காரியத்தையும் செய்யலாம், இமொஜனிருக்கிற அறைக்குள் போகலாம், பணமிருந்தால் பதிவிரதா தருமத்தையும் கெடுக்கலாம், கொலைசெய்தவனைவிட்டு ஒன்றுந்தெரியாத வேறொருவனைத் தூக்கில் போடும்படி செய்யலாம்; சிலவேளையில் இரண்டுபேர்களையும் தூக்கில் போடும்படிசெய்யலாம், பணத்தால் என்னதான் செய்யமுடியாது. இத்தோழிகளில் ஒருவளுக்குப் பணத்தைக்கொடுத்து என் காரியத்தை நிறை

வேற்றுகிறேன்" என்றுசொல்லிக் கதவைத்தட்டினன். அப்போது ஒரு தோழிவந்து, அங்கேயாரென்று கேட்க, க்ளோட்டன் "நான் ஒரு கனவான், இமொஜனை விரும்பிவந்தேன், அவள் தயாராயிருக்கிறளா! நான் உனக்கு வேண்டியதிரவியம் கொண்டுவந்திருக்கிறேன், தயவுசெய்து இமொஜனிடத்தில் என்னைப்பற்றிப் புகழ்ந்துரை" என்று சொல்ல, அதற்குத் தோழி, "ஆ! என்ன சொல்சொல்லுகிறய், என் காதில் ஈயத்தைக் காய்ச்சிவிட்டதுபோலிருக்கின்றதே! உன்னிடத்தில் பணத்தைவாங்கி நான் காணுகிறதற்கு விரோதமாய் உன்னைப் புகழ்ந்துசொல்லவா!" என்றுரைத்து இமொஜனைக்கூப்பிட அவள்வெளியே வந்தாள். அப்போது,

க்ளோட்டன்.—பெண்மணியே! காலைவந்தனம். உன் கையைக்கொடுப்பாயாக. (தோழி போகிறள்)

இமொஜன்.—காலைவந்தனம் ஐயா! வீணுப் என்னிடத்திலிருந்து கஷ்டத்தையனுபவிக்கப் பிரயாசைப்படுகிறய், உன் பிரயாசைக்கேற்றபடி; என்னால் வந்தனமளிக்க முடியாது, துன்பத்தையே தருவேன்.

க்ளோ.—ஆனாலும் சத்தியமாகச்சொல்லுகிறேன், நான் அதிகமாகவே உன்னை நேசிக்கிறேன்.

இமொஜன்.—நீ என்ன சொன்னாலும் என் காதில் ஏறுது. உன்னையெப்பொழுதும் வெறுத்துக்கொண்டிருக்கிறேன். நீ எவ்வளவு பக்ஷமாயிருக்கிறயோ, அவ்வளவுதூரம் உன்னை வெறுக்கிறேன். அதிகமாய்க்கற்ற நீ என்னைவிட்டுப் போவென்றல் போகாமல் கஷ்டப்படுத்துகிறயே?

க்ளோ.—பைத்தியம் பிடித்த உன்னை இந்த ஸ்திதியில் வைத்துவிட்டுப் போனல் எனக்கல்லவோ தோஷம். நான் உன்னைவிட்டுப் போகமாட்டேன்.

இமொ.—முட்டாள்கள் பை த்தியம் பிடித்தவர்களல்ல.

க்ளோ.—ஆனல் என்னை முட்டாளென்று சொல்லுகிறயா.

இமொ.—எனக்குப் பைத்தியம் பிடித்ததினல் உன்னை முட்டாளென்று கூப்பிட்டேன். என்னிடத்தில் வந்து வார்த்தைகள் சொல்லிக் கஷ்டப்படுத்தாமலிருந்தால் என்னைவிட்டுப் பைத்தியம் ஓடும். அப்பொழுது உன்னையும் முட்டாளென்று கூப்பிடமாட்டேன். என்னசெய்வேன்! வீண்வார்த்தைகளைச் சொல்லி, என்னைக் கலியாணம் பண்ணிக்கொள்ளவேணுமென்று கஷ்டப்படுத்தி, பெண்களின் மரியாதையைக் கெடுக்கிறயே! கடைசியாகச் சொல்வதைக்கேள்:—நீ என்ன

உபகாரஞ் செய்தாலும் நான் உன்னை மதிக்கவில்லை; சத்தியமாகச் சொல்லுகிறேன். கேள் நான் உன்னை ஆரம்பமுதல் வெறுத்துக்கொண்டு வருகிறேன். இதை நான் சொல்லவேண்டுவதில்லை. உனக்கே தெரிந்திருக்கும்.

க்ளோ.—உன் தகப்பனுக்குச் செய்யவேண்டிய மரியாதை உன்னைவிட்டுப் போயிற்றே? ஏழைவம்சத்தில் பிறந்து, அரண்மனையிலுண்டான எச்சிலையுண்டு காலங்கழித்துவந்த இந்தப் பிச்சைக்காரனை நீ கலியாணம் பண்ணிக்கொண்டது எவ்விதமிருக்கிறது. ஆனால் இழிவான ஜாதிகளில் இவ்விதம் நடக்கும். இவனோ இழிவான ஜாதிகளினும் இழிவானவனாயிருக்கிறான். எல்லாரும் தங்கள் சுயேச்சையாய்க் கலியாணம் பண்ணிக்கொள்வார்கள். ஆனால் நீ பட்டத்துக்குவரப்பட்டஸ்திரீயாகையால் உன்னிஷ்டபடி கலியாணம் நடக்காது. நீ ஒரு இழிவான அடிமைக்கும் வேலைக்காரனுக்குமொப்பான ஒரு தரித்திரனைக் கலியாணம்பண்ணி அவனுக்கு இச்சிம்மாசனத்தைக் கொடுக்க யார்தான் சம்மதிப்பார்கள்? வீண் எண்ணம்வேண்டாம்.

இமோ.—சீ, பரமசண்டாளா! என்ன சொன்னாய். நீ பிரகஸ்பதியினுடைய குமாரனாயிருந்தாலும், பாஸ்துமஸுடைய குதிரைக்காரனாக நியமிக்கப்படுவதற்குக்கூட உனக்கு யோக்கியதையில்லையே. இப்பொழுது உன்னிடத்திலிருக்கிற குணங்களையறிந்து இந்த ஊரில் கொலையாளிகளை வெட்டுகிற தோட்டியாக உன்னை நியமித்தாலும், எல்லாரும் உன்னுடைய குணங்களுக்கேற்ற தொழில் கிடைக்கவில்லையே தோட்டியாக நியமிக்கப்படுவதற்கு என்ன பாக்கியம் செய்தாயோ என்று உன்னைப்பார்த்துப் பொறாமைப்படுவார்களே! இப்படியிருக்க என் நாதனை நீ என்னசொன்னாய்.

க்ளோ.—அவன் நாசமடைவானாக.

இமோ.—நீ அவன் பெயரைச் சொல்வதினாலுண்டான துன்பத்தைத் தவிர வேறே அவனுக்குத் துன்பம் வராது. உன்னுடைய தலையில் எவ்வளவு ரோமமிருக்கிறதோ அவ்வளவு க்ளோட்டனைப் பார்க்கிலும், பாஸ்துமஸுடைய மிகவும் இழிவான ஒரு உடை எனக்கு அதிக விலையுயர்ந்ததாய்த் தோன்றுகிறது. (பிஸானியோ வருகிறான்)

ஏ பிஸானியோ, இங்கே ஒருமுட்டாள் என்னைக்கஷ்டப்படுத்துகிறான் அதினால் எனக்குக் கோபம் சகிக்கமுடியவில்லை. என்னையறியாமல் கையிலிருந்து என்னுடைய காப்பு தவறிவிழுந்துவிட்டது. தோழிகளைக்கூப்பிட்டு அதைத் தேடிப்பார்க்கச்சொல். அது என் பர்த்தாவுடையது.

உலகத்திலுள்ள திரவியங்களனைத்தையும் ஈடாகத்தந்தாலும் அந்தக்காப்பை ஒருவருக்கும் கொடுக்கமாட்டேன். இன்று காலையில் என் கையில் கண்டதாகத் தோற்றுகின்றது. நிச்சயமாக நேற்றிரவு என் கையிலிருந்தது. நான் அதை முத்தமிட்டேன். கஷ்டம், என்னசெய்வேன். என் பர்த்தாவிடத்தில் யாராவது அதையெடுத்துக்கொண்டுபோய் என் பதிவிரதாதருமம் கெட்டுப்போய்விட்டதென்றுசொல்லாமலிருக்கவேணுமே. என் தலைவிதி இவ்விதமாய்விட்டதே.

பிஸானியோ.—அது தவறிப்போயிருக்கமாட்டாது.

இமோ.—ஆம், போய்த்தேடிப்பார். (பிஸானியோ போகிறான்)
அப்பொழுது க்ளோட்டன் இமொஜனைப் பார்த்து "நீ என்னை வைதாயல்லவா, அவனுடைய மிகவும் இழிவான உடையா. இதோ போய் அரசனிடத்தில் சொல்லுகிறேன்." என்று சொல்ல, இமொஜன் "அரசனிடத்தில் மாத்திரமல்ல, அவன் மனைவியிடத்திலும் சொல், எனக்குத் துன்பந்தான் செய்வாள், செய்யட்டும்" என்றுரைக்க, க்ளோட்டன், என்னை யவமானஞ்செய்ததற்காகப் பழிவாங்குகிறேனென்று சொல்லிப்போய் விட்டான். சிறிது நேரத்தில் பீப்பாயை இயாக்கிமோ முன்னே கேட்டுக்கொண்டபடி அவன் வீட்டுக்கு அனுப்பினாள்.

## இந்துப்பெண்களின் கல்வியுணர்ச்சி.

கிரு.—அம்மா உங்கள் கருத்துணர்ந்தேன். எய்தவனிருக்க அம்பை நோவதுபோல் கலவியறிவு சிறிதேனுமில்லாத கசடர்களின் சகவாசமும், அதற்கு மூலாதாரமாகியுள்ள சிற்சில நாகரீகத் தேர்ச்சியெய்தா ஆண்மக்களின் மேல்வரிச்சட்டமும், உங்களால் வெறுக்கப்படவேண்டுமன்றி, இல்லறமென்செயுந்? உங்களிடம் வந்து சம்பாஷிப்பவர் அனைவரும் கல்விச்சுவை ஒருவாறு உணர்ந்தவர்களாக விருந்து, உங்கள் வீட்டுப் புருஷர்களும், கல்வியில் அபிமானமுடையராய் அடிக்கடி உற்சாகப்படுத்தி வருவார்களாயின் அப்பொழுது இல்லறம் கெட்டதெனச் நலிப்புண்டாகுமோ?

சாந்.—ஆம், தாங்கள் கூறியபடியானல் என்ன வெறுப்பிருக்கிறது? அத்தகைய நற்காலமும் நமது வாழ்நாட்களுக்குள் வருமோ?

கிரு.—அம்மா "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" இப்பெண் கல்வி தலையெடுத்து நமது தேசம் சிறப்பெய்தவேண்டுமென இராப்பகல்

நல்லுறக்கமின்றிப் பாடுபடும் உத்தமபுருஷர்களும் அநேகரிருக்கிறார்கள்; நாமும், அங்கிலேய மாதர்கள் கல்வியினால் அடைந்திருக்கும் மேன்மையையும் சுகத்தையும் ஆழ்ந்து சிந்தித்தாவது, ஒழிந்தநேரங்களைக் கல்வியாராய்ச்சியிலேயேசெலவிடல்வேண்டும். இன்றேல், "மன நல நன்குடையராயினுஞ் சான்றோர்க்கின நலமே மாப்புடைத்து" என இயற்கையிலேயே நல்ல மனமுடையோர்க்கும், சகவாசம் நன்மையுடையதாயிருத்தல்வேண்டும் என்று உறுத்திக்கூறினர் பெரியோர். இயற்கை யறிவுடையோர்க்கும், நல்லினமே வேண்டற்பாலதெனின், ஏனையோர்க்கு சிற்றினஞ் சேர்தல் சிறிதுங்கூடாதென்பதில் ஐயமுண்டோ? அனைத்தும் அதனால் விளையுந் தீங்கே.

சாந்.—ஆம், தாங்கள் புகல்வது முற்றிலுமுண்மைதான். இத்தகையவிணர்களின் சகவாசம் மட்டில் நீங்கினாலும் போதுமே.

சண்டகி.—என்னடியம்மா, நாங்களும் போகவேண்டாம் என்று இந்த பூமியில் இன்னும் இருந்து இன்றைக்குப் பிறந்தது நாளைக்குப் பிறந்தது கட்கெல்லாம் கீழ்த்தரமாய் காலந்தள்ளவேண்டுமென்று பிரார்த்தனை செய்துகொண்டிருக்கவில்லை. வஞ்சனைக்கார தெய்வத்திற்குக் கண்ணில்லையே, நாங்களாக ஏணிவைத்தால் ஏறுவோம், நீங்களாக ஒரு பாழுங்கிணற்றிற்றள்ளிப் பெரிய பாறுங்கல்லைப் புரட்டிவிடுங்கள், அப்பறம் அச்சமற்றிருக்கலாம். நீங்கள் வம்பு வீணே அறிப்மாட்டீர்கள். பாவம், தெருவேவிளங்கிவிட்டது. பெரியவர்கள் பெயரும் முன்னிற்கு வந்துவிட்டது.

சாந்.—அம்மா கோபிக்கலாமா? பெரியவர்கள் பெருமைக்கு எங்களால் என்ன குறைவு நேர்ந்துவிட்டது?

சண்.—அதைக் கேட்பானேன். எப்பொழுது பார்த்தாலும் புஸ்தகமுங் கையும் நாழிக்கொரு நகையும் நாணமுமும் நகத்தில் மண்படாமல் இருக்கும் ஒழுங்கும், ஊரிலுள்ள தேவடியாட்களெல்லாம் சொல்லாமல் தான் ஒடிவிடவேண்டும். நீங்கள் எக்கேடுகெட்டாலெனக்கென்ன? இந்த வீட்டில் இருக்கிறவள் இருந்தால் தெரியும், அதை நினைத்துப் பயனென்ன? நான் போகிறேன் நீங்கள் எதையாவது சொல்லிக் கொள்ளுங்கள். நானென்ன உங்களுக்கெல்லாம் பயந்தா இருக்கிறேன்.

கிரு.—என்பேரில் ஒன்றும் மனவருத்தம் வேண்டாம்.

சாந்.—ஏனம்மா? சமாதானம் பேசப்போகிறீர்கள், ஒழிந்தாலே நலம் தான்.

கிரு.—அம்மா, நீங்கள் கருதியது எனக்கு முடன்பாடே ஆயினும் "புகையுடைத் தென்னினுண்டு பொங்கனலங்கென் றுன்னுமிகையுடைத்துலகநூலோர் வினையமும் வேண்டற்பாற்றே" என்று சுக்கிரீவனுக்கு இராமபிரான் அறிவுறுத்தியதாகக் கவிச்சக்கிரவர்த்தியாகிய கம்பநாட்டாழ்வார் கூறியுள்ளதை மறக்கலாகாது. இங்ஙனம் மனத்தெளிவையும் அடக்கத்தையும் தரும் நூலாராய்ச்சி சிறுதுமமையப் பெறு அவிவேகிகளிடம், நமக்குள்ள அசூயையைச் சொல்லாலாவது முகத்தாலாவது காண்பிப்பது நமக்கே பெருந்தீங்காய்முடியும். ஏனெனின் அத்தகை எண்ணம் நமக்கிருப்பதென அவர்கள் சற்று உணர்ந்தாலும் நம்மீதுவிசேஷ பகைமைபாராட்டி ஒன்றைப்பத்தாக்கி பிறர் நம்பும்படி வெகு பக்குவமாய் இரண்டொரு தினங்களுக்குள்ளேயே ஊரெங்கும் பரவும்படி பலவாறு பழியலர் தூற்றிவிடுவர். இதில் இவர்க்குள்ளதிறமை எத்தகைக் கல்விமானுக்குமிராது.

சாந்.—ஆம் அம்மா, தாங்கள்தானே பல தடவைகளிலும் உலகம் உயர்ந்தோர் மாட்டு என்று புகன்றிருக்கிறீர்கள். அப்படி உயர்ந்தோரல்லாத இழிந்தோர் நம்மையிகழ்வதால் நமக்கென்ன குறைவு?

கிரு.—நீங்கள் கேட்டதும் சரியே, இத்தகையோர் உயர்ந்தோரல்லரென்றுதான் இவர்களை யொருபொருட்படுத்தி இவர்கள்மீது சினங்கொண்டு அதனை வெளியிடக்கூடாதென்பது.

சாந்.—நாம் ஒன்றும் கடுமுகங்காட்டாவிடினும் நமது நடை அவர்கட்கு ஒவ்வாததால் நம்மை யவர்கள் வெறுக்கத் தலைப்படுகின்றார்களே

கிரு.—அறிவின்மையால் அவ்வித வெறுப்பு அவர்கட்கு உண்டாவது இயல்பே. அதைத் தடுக்கவேண்டுமென நினைந்து நாம் கவனிக்கப் புகுந்தால் அது பலப்பட்டு பற்பல பிரிவுள்ள புகார்களாய் பலவழியும் பரவும். உலகம் பொய்யை மெய்யெனக் கருதி மயங்கும் அறியாமையைப் பெரும்பான்மையுமுடைய தாதலின் அவ்வளவு விபரீதத்திற்கு நாமே முந்திக்காரணர்களாகிப் புண்படுதல் தகாதென்பதே.

சாந்.—அம்மா யாவும் உண்மையே, அவ்விதமுன் யோசனையுடன் அடங்குவது தான் அறிவு, அப்பெருமதிபமைதல் மிக அரிதாகவே காண்கிறது.

கிரு.—"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை ஆரிருள் உய்த்துவிடும்" அடக்கமுடைமை சுவர்க்கமென்று கூறும் தெய்வலோக வாழ்வைத் தரும்; அவ்வடக்கமின்மை அந்தகாரமான நரகத்தை யநுபவிக்கச் செய்யும் என்றார் பெரியர். இதனைப்படித்துந் திருந்தாவிடில் நம்மிற்

பேதையுலகில் இல்லை யென்பதற்கு "ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத் துந் தானடங்காப் பேதையிற் பேதையாரில்" என்னும் மூதுரையே சான்றாகாதோ ?

சாந்.—அம்மா அபலவர்களிடம், தாம் மேலே காட்டியவாறே நடந்துகொள்ளலாம். அவ்வாறின்றி நெருங்கிய உறவினரும் வீட்டு ஆடவர்களும் கல்விப்பயிற்சிக்குத் தடைசெய்யக் கங்கணங்கட்டிக்கொண்டிருக்கிறார்களே! இத்தகைய நிர்பந்தத்தை யநுபவிக்கும் பெண்களுக்கு எந்தக்காலம் விமோசனம்? உதாரணமாக நேற்று எனக்குக்கிடைத்த சமாசாரத்தைக் கேளுங்கள்.

நன்னிலத்தில் வாழ்க்கைப் பட்டிருக்கும் எனதிளைய சகோதரி பங்கஜத்தை இளந்தையில் வரத்துப்போக்கில் தாங்களும் பார்த்திருக்கலாமே. அந்தப்பெண் வாழ்க்கைப்பட்டு புக்ககம் சென்று வருஷம் 6 ஆகிறது. தாயகத்தார் பன்முறை வருந்தியழைத்தும் அனுப்பாமல் மறுப்பதன்றியும், வீட்டு வேலைகளுக்கெல்லாம் யார் உத்தரவாதமென்றும், அப்படி எங்கள் அநுமதி பெறுமல் மீறி அழைத்துப்போனல் போகட்டுமே. இவளில்லாவிட்டால் இன்னொருத்தி யாகிருள், நான் நீ யென்று எதிர் ஜாமீனுடன் எத்தனையோ பெண்கள் வரக் காத்திருக்கிறது. பிறந்திருப்பதும் கலியாண மாசந்தான் என்றும் கூசாமற் பேசுவார்கள். அன்றியுமிதற் குதாரணமாக இவர்கள் எதிர் வீட்டிலுள்ள பரம ஏழையான ஓர் விதந்து தனது ஒரே புதல்வனை இளமை முதற்கொண்டு தயவால் ஆதரித்துக் கல்விபயிற்றுவித்து தன் செல்வப் புதல்வியையும் (வேறு தக்கவரனில்லாமல்) கன்னிகா தானம் செய்து உத்தியோகமும் செய்வித்துக்கொடுத்த சம்மந்தியான ஓர் பெரிய வக்கீலை பெண் ருதுவானதைக்கண்டு சிறிதும் தாட்சண்யம் பாராமல் ரூ. 500 கொடுத்தாலன்றி ருதுசாந்தி முகூர்த்தம் நடத்த சாத்தியப்படாதென்று கடிதமெழுதிவிட்டாள். அந்த வக்கீலும் பாவம் மானத்திற்கஞ்சிப் பொருள் கொடுக்க நேராததால், பெண் 3 வருஷங்களாக தாய் வீட்டிலேயே இருக்கிறது. பிள்ளைக்கும் தற்காலமுள்ள செல்வாக்கால் வேறு பெண்ணும் விவாகமாய்விட்டது. கேட்டீர்களோ! அம்மா! இதை யொப்ப நமது பெண்ணும் ஆனல் என் செய்வதென்பது எங்கட்கு பயம். இதனாலேயே நாங்களும் அழைப்பதையே விட்டுவிட்டோம். இது நிற்க இப்பொழுது வந்த செய்தியால் என் சகோதரியை அவள் மாமிவீட்டார், புருஷனுள்பட நிகிர்ஷ்டம் செய்து வைத்திருக்கிறதாக ஏற்படுகிறது. காரணம். இப்பெண்

இங்கு தாய் வீடடிலிருக்கும்போது செம்மையா யெழுதப்படிக்கப் பயின்றவள். அங்குபோன பிறகு அக்தஸ்மரணையே கிடையாது, அப்படியிருந்தும், எங்கள் தாயார் அதிக காயலாவென்று பரஸ்பரமாய்க் கேள்விப்பட்டதால் மனம் தாளாது அதன் உண்மையைத் தெரிவிக்கும்படி சகோதரனுக்கு ஒரு கடிதம் வெகு இரகசியமாய் எழுதி பாடசாலைச் சிறுவர்களிடமாக தபாலில் சேர்ப்பித்து விட்டாளாம். இது சங்கதி எப்படியோ பின்பு இவர்களுக்குத் தெரிந்துவிட்டதாம். இதன்மேல் இப்படி சகோதரனுக்கு இன்று எழுதினவள் நாளைய தினம் சோரநாயகனுக்கு எழுதத்தடையென்ன ? வென்று இவள் ஒன்றையும் பரிசிக்கக்கூடாதென்று ஒதுக்கியிருக்கிறார்களாம். ஐயோ பாவம்! மற்றதெல்லாம் போகட்டும் இப்படிப்பட்ட பெண்கள் எப்படி கல்வியை விர்த்திசெய்து கொள்ளக்கூடும்? எந்தக்காலம் விமோசனம்? பங்கஜம் இங்கு வசன நடையேயன்றி அருட்பா, தாயுமானவர் பாடல், இதுகளை மிக்க ஆவலுடன் படித்துவந்த தன்றியும் உருக்கமாயும் பாடக்கூடியவள். அதை நினைக்க ஆருத்துயரமாயிருக்கிறது. என்ன செய்யலாம் ஈசன் செயல்!

கிரு.—அம்மா இப்படிப்பட்ட கொடுமைகள் எண்ணிறந்தவைகளைப் பிரத்தியட்சப் பிரமாணமாகவும் கண்டிருக்கிறேன். எனினும் உங்கள் சொந்த விவகாரமாகவே இத்துன்பம் நேர்ந்ததென்பதைக் கேட்கமிக்க வருந்துகிறேன். ஏற்கனவே இத்தகைத் துன்பங்களும் பாலவிவாகமெனும் பாதகச் செய்கையும் எக்காலத்து நம்மவர்களைவிட்டு நீங்குமோ ? நமது சகோதரிகள் எக்காலத்துச் சுகம் பெறுவரோ ? என்றும் அதற்குரிய உபாயங்கள் யாதுயாது என்றும் கருதுவதற்கே மனமொழிமெய்களைத் தத்தம்செய்ய அந்தரங்கத்தில கட்டுப்பட்டிருக்கிறேன். பகிரங்கத்திலும் பாடுபடக்கூடிய தற்சுதந்தர நற்காலத்தையும் இது விஷயமாகப் பாடுபட முன்வரும் உத்தமசகோதரர்களினது ஊக்கத்தையும். எதிர்பார்த்துநிற்கிறதாகவும் கூறத்துணிகின்றேன். மேலே தாங்கள் குறிப்பிட்டது போன்ற புக்ககக்கொடுமைகள் எனக்குத் தெரிந்தவரையில் நமது பிராமண வகுப்பில் தானென்று உறுதியாய்ப் புகலலாம். அதிலும் தட்சிண தேசமே தலைமைத்தாம்பூலம் வாங்கும் தலைக்கோல் மங்கை. அதைப்பார்த்து இவ்வட தேசத்திலும் இரண்டொருவர் அவ்வித்தியா வெற்றியடைய முயன்றும் அப்பியசித்தும் வருகிறதாகக்கூறலாம். (இன்னும் வரும்.)

அசலாம்பிகையம்மாள்.

## ஓர் தமிழ் நாவல்.

**தீனதயாளு** இப்பெயர்பூண்ட ஓர் கல்வித்திறமை வாய்ந்த கதைப் புஸ்தகம் எமது பார்வைக்கு வந்திருக்கிறது. சாதாரணமாக தமிழ்தெலுங்கு சமஸ்கிருதம் முதலிய பாஷைகளில் வசனரூபமான புஸ்தகங்கள் வெகுகாலமாக எழுதப்படவில்லையென சரித்திரத்தால் தெரியவருகிறது. ஆனால் தற்காலத்தில் ஆங்கிலேயம்கற்ற பண்டித சிரோன்மணிகளில் சிலர் அவ்வித புஸ்தகங்கள் எழுதியிருக்கிறார்கள். இவர்களில் தெலுங்கு பாஷையில் பாண்டித்தியமுள்ள ம-ா-ா-ஸ்ரீ ராய் பஹதூர் **கே. வீரேசலிங்கம் பந்துலு** அவர்கள் அநேக வசனகாவியங்களை இயற்றியிருக்கிறார்கள். இவைகள் விசேஷமாக தெலுங்கு ஜனங்களால் மதிக்கப்பட்டு வருகின்றன. இவர் செய்த புஸ்தகங்களில் அதிக விசேஷமானது **ராஜசேகரமென்றதும், சத்தியராஜன் பிரயாணம்** என்றதும், ஆங்கிலேய நாவலைப்போலவே யிருக்கின்றன. இவ்விதம் தமிழில் ஒருவரும் பிரசுரம் செய்ய பிரயத்தனம் செய்யாமலிருந்தாலும் சுதேசமித்திரன் என்ற நண்பர் **தீனதயாளு** என்ற அற்புதக்கதைப் புஸ்தகத்தை எளியநடையில் எழுதியது தமிழ் ஜில்லாக்களிலுள்ள ஜனங்களுக்கு ஆங்கிலத்தில் நாவல் என்று சொல்வது இவ்விதம்தானிருக்குமென்று நாம் சொல்லாமலே விளங்கும். இதில் கதாநாயகன் "மகன்றந்தைக் காற்றும் உதவி யிவன்றந்தை யென்னோற்றான் கொல்லென்னுஞ்சொல்," என்கிற நாயனார் வாக்கியத்தின் கருத்தை எவ்விஷயங்களிலும் நன்குவிளக்கியிருக்கிறார். இன்னும் இல்லறவொழுக்கத்தில ஆண் பெண் என்ற இருபாலாரும் நடந்துகொள்ள வேண்டிய ஒழுக்கங்களும் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. "பெண் குழந்தைகளும் ஆண் குழந்தைகளைப்போலவே படிக்கவேண்டும், அவர்களுக்கும் ஈசன் புத்தியைக் கொடுத்திருக்கின்றார். ஆகையால் படிப்பால் அதை சீர்திருத்தாமல் விடுவது பாவம்" என்ற கதாநாயகன் கொள்கை விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றது. கடைசியாக விடாமுயற்சி ஒவ்வொருவனுக்குமிருக்கவேண்டுமென்றும் இக்கதையால் நன்குவிளங்குகின்றது.

## பாகசாஸ்திரம்.

ALL RIGHTS RESERVED TO THE AUTHOR.

### 71 A. வெங்காயத் தித்திப்பு அடை. (2)

இப்பதார்த்தமானது (அதிக உஷ்ண) காரக மூல சரீரிகளுக்கு வெகு நன்மையை விளைவிக்கின்றதாயும், வெகு ருசிகரமானதாயு மிருக்கின்றது.

**வெங்காயம்**—ஒரு (1) வீசை—இதன் வேர் நுனி, உலர்ந்த மேற்றோல் முதலியவைகளைப் போக்கிவிட்டுச் சிறுசிறு துண்டுகளாய் நறுக்கி அதைக் கொஞ்சம் மிருதுவாகும்வரையில் நல்லஜலத்தில் வேகவைத்துப் பின்பு அந்த ஜலத்தை வடித்துவிட்டு மற்றொருதடவை கொஞ்சம் சுண்ணாம்புத் தெளிவுஜலத்தை விட்டுக் கொஞ்சம் வேகவைத்துப் பின்பு ஓர் சுத்தமான வெள்ளைத்துணியிற் கொட்டிப் பிழிந்து வைத்துக்கொள்ளவேண்டியது. இவ்வாறு செய்வதினால் வெங்காயத்தின் துர்க்கந்தம் போம்.

**சீனிச்சக்கரை**—பிழிந்துவைத்திருக்கும் வெங்காயத்தின் ஒன்றரைமடங்கு நிறை—

**துந்துப்பூ**—கால் ($\frac{1}{4}$) ரூ. எடை—இவைகளைக்கொண்டு (இந்துபாக சாஸ்திரத்தின் 126-வது பக்கத்திற் சொல்லியபடி) முதிர் பாகாக்கி அதில் பிழிந்துவைத்

திருக்கும் வெங்காயத்தை அதிற்போட்டு உடனே, வாதுமைப்பருப்பு—இரண்டு (2) பலம், தீபந்திராக்ஷைப்பழம்—ஒரு (1) பலம், வெள்ளை ஏலரிசி—அரைக்கால் ($\frac{1}{8}$) பலம், நெய்—இரண்டு (2) பலம்—இவைகளில் வாதுமைப்பருப்பை வெந்நீரில் ஊறவைத்துச் சிவப்புத்தோலைப் போக்கிச் சிறுசிறு துண்டுகளாய் நறுக்கி நெய்யில் வறுத்து அல்லது வறுக்காமலும், திராக்ஷைப்பழத்தை செத்தை, குப்பை அழுக்கு முதலியவையில்லாமலும், ஏலரிசியைப் பொடிசெய்தும், வெங்காயம் கலந்த பாகிற்போட்டு மத்தினால் கொஞ்சம் மர்த்தித்து அது சற்று ஆறியபின், ஓர் தாம்பாளத்தில் கொஞ்சம் நெய்யைத்தடவி அதில் வெங்காயம் முதலியவை கலந்த பாகைக்கொட்டி வட்டமாய் அடைபாகத்தட்டி மேலொரு தாம்பாளத்தைக் கவிழ்த்து அதைத் தணலின் மேல்வைத்து கவிழ்த்த தாம்பாளத்தின்பேரிலும் கொஞ்சம் தணலைக்கொட்டி அடையின் வாசனை வரும்வரையில் அப்படியேவைத்திருந்து பின்பு அப்பாலெடுத்து ஆற்றி உபயோகிக்கவேண்டியது.

இதைப்போலவே வெள்ளைப்பூண்டைக்கொண்டும் அடை செய்யலாம். **T. K. R.**

---

செப்டம்பர் மாதத்து சஞ்சிகையில் வந்த விடுகதைகளுக்கு விடை வருமாறு:—

(1). ரயில்வண்டி. (2). கழனி.
(3). குந்துமணி. (4). மிளகாய்.

**விடுகதை.**

ஐந்தெழுத்துள்ள ஒருமொழி, 1-வது, 4-வது, 5-வது எழுத்துக்கள் கம்பி என்று பொருள்படும். 3-வதும் 5-வது யோகீஸ்வரர் என்று பொருள்படும். 2-வது, 4-வது, 5-வதும் ஓர்வகைக் குரங்கு, 1-வது, 5-வதும் தயிர் என்று பொருள்படும். முழுதும் ஓர் உத்தமஸ்திரீயின் நாமம்.

**காந்திமதியம்மாள்.**

**விடுகதைகள்.**

(1) ஓஹோரனண்டி, ஓசந்தரனண்டி, உடம்பிற்சாம்பலை பூசினனண்டி, கையிற்கப்பரை யேந்தினனண்டி, கழுததில் ருத்திராட்சம் போட்டானண்டி.

(2) பச்சைப் பசையிலே பென்றிருக்கும், பாகக்காயுமல்ல, மேலெல்லாம் முள்ளாயிருக்கும் பலாக்காயுமல்ல, உள்ளே வெளுத்திருக்கும் தேங்காயுமல்ல, உருக்கினல் நெய்காணும் வெண்ணெயுமல்ல.

(3) மாடு படுத்திருக்க மூக்காங்கயர் சுத்திவர.

**செல்லம்மாள்.**

## மாதர்மனோரஞ்சினி வாழ்த்து.

சீதரனர் மார்பினுறை செல்வத் திருமகள்போல்
மாதர் தமக்காவிரங்கி வந்திந்தப்—பூதலத்தில்
நீதி பலபுகன்று நித்திலமொத்தே யிலங்கும்
மாதர் மனோரஞ்சினீ நீவாழ்.
மாதர் மனோரஞ்சினி நீ மாதமொரு முறையில்
பூதலத்தில் வந்துதித்தால் போதாது—மாதமிரு
முறையாக வந்துன் முகதரிசனங் காட்டன்
மறையாம் நீ நன்குமதி.

**சா. சுப்பம்மாள்.**